★ தி. மு. க. கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவான பதிலை விரும்புகிறது!

மதுரையில் கூடிய தி. மு. க. பொதுக் குழு செய்த முடிவுகளை விளக்கி, பொதுச்செயலாளர் சி. என். ஏ. அறிக்கை வெளியிட்டார். அதற்கு விடைதரும் முகத்தான் 2–12–51-ல் 'ஜனசக்தி' ஒரு கட்டுரை தீட்டியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையை ஆராய்கிறது கீழ்வரும் அறிக்கை.

திராவிடநாடு

5–12–51

தனி இதழ்] [விலை ஒன்றே காலணா

★ மதுரை காட்டிய வழி மக்களாட்சிக்கு வழி வகுக்கும்

★ உறுதிமொழிச் சீட்டு ஒன்றே நம் உறவை உறுதிப்படுத்தும்

"உள்ளத்தைக் கேட்கிறேன், உலக வரலாற்றை அல்ல"

—அண்ணாதுரை—

திராவிட நாடு பிரச்சினையைக் கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கிறார்கள்.

திராவிட இயக்கத்தை மக்கள் எழுச்சியின் எடுத்துக்காட்டு, வளர்ந்து வரும் ஜனநாயக உணர்ச்சியின் உருவம், என்று கம்யூனிஸ்டுகள் கூறுகிறார்கள்—பாராட்டுகிறார்கள்.

திராவிட நாடு பிரச்சினையை ஆதரிக்கும் விதமானதுதான், தேசிய இனவாரி சுயநிர்ணயம் என்பதான திட்டம் என்று கம்யூனிஸ்டுகள் விளக்கம் தருகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் பலர், பல இடங்களிலிருந்து கடிதமூலமாகவும், உரையாடலின்போதும், மேலே குறிப்பிட்ட கருத்துகளை எடுத்துரைத்தனர். கேட்டேன், களித்தேன், நீண்டகாலமாக இருந்து வரும் நிலைமை மாறிவிடும், நேசம் வளரும், நாட்டிலே புதியதோர் பொலிவு ஏற்படும் என்று எண்ணி எண்ணிப் பூரிப்படைந்தேன்.

நண்பர் ஜீவானந்தத்தைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டபோதெல்லாம் இந்தப் பூரிப்பு வளர்ந்தது—நம்பிக்கை பலப்பட்டது.

எனவேதான், ஏற்கெனவே கம்யூனிஸ்டு நண்பர்கள் பல இடங்களில் பொதுக் கூட்டங்களிலும், உரையாடல்களின்போதும், எந்தத் திராவிடநாடுபிரச்சினையை ஆதரிக்கிறார்கள் என்று தி. மு க.நண்பர்கள் என்னிடம் கூறினார்களோ, அந்த திராவிட நாடு பிரச்சினையை ஆதரிப்பதாக உறுதி தரும் ஒப்பந்தப் பத்திரத்தில் கையொப்பமிட்டு, அரும்பியுள்ள நேசத்தை மலரச் செய்வதிலே, கம்யூனிஸ்டு கட்சிக்கு தடையோ, தயக்கமோ, திகைப்போ இருக்கமுடியாது, நிச்சயமாக என் அன்பழைப்பை, அதன் தூய்மையை எண்ணி ஏற்றுக்கொள்வார்கள் என்ற திடமான நம்பிக்கையுடன், மதுரையில், தோதலைக் குறித்து, கம்யூனிஸ்டு கட்சியினரின் கண்ணியத்துக்கு ஒருவிதமான மாறும் செய்யாத வகையான தீர்மானம் நிறைவேற்றியதுடன், அதை விளக்கிடும் அறிக்கை வெளியிட்டு, கனிவுடன் நேசக்கரத்தை நீட்டினேன்.

அந்த நேசக்கரம்—அரசியல் சூதாடிகள், முதலாளிக் கும்பல், வைதீக வெறியர். ஆகியவர்களைத் தீண்டவும் மறுத்திடும கரம், இதை அறிந்து, கம்யூனிஸ்டு கட்சியினர் என் அழைப்பை அகமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வார்கள் என்று மிக மிக உறுதியாக நம்பினேன்.

என் மேஜைமீது ஏறத்தாழ நூறு ஒப்பந்தப் பத்திரங்கள் உள்ளன—பக்கத்திலே சென்ற கிழமை "ஜனசக்தி" இருக்கிறது!

நான் கம்யூனிஸ்டுகளுக்கு அன்பழைப்பு தந்தேன்—அவர்கள் இன்னமும் உறுதிமொழிச் சீட்டை அனுப்பவில்லை—மாறாக, "ஜனசக்தி" மூலம், 'பதில்' அனுப்பி இருக்கிறார்கள்.

இது நான் எதிர்பார்த்ததல்ல—ஆனால் மதுரை பொதுக் குழுவிலே பல நண்பர்கள் இப்படித்தான் ஆகும் என்று எச்சரித்தனர்—நான், கம்யூனிஸ்டுகளின் சார்பாக வாதாடினேன். இப்போது 'அப்போதே சொன்னோம்' என்று என் நண்பர்கள் கூறிடக் கேட்கிறேன்—கவலைப்படுகிறேன்.

நான், அறிக்கை வெளியிட்ட பிறகு, அதுபற்றி விளக்கம் அறியவோ, விவாதிக்கவோ, கம்யூனிஸ்டு நண்பர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்தேன்—அதுதானே முறையுங்கூட.

நீண்டகாலமாக, மோதிக்கொண்டிருந்த இரு இயக்கங்கள், நாட்டிலே கிளம்பியுள்ள நெருக்கடியின் போது ஒன்றுபட்டுப் பணியாற்ற விழைகின்றன—அதற்கான துவக்கப் பேச்சு பலமாக நடைபெற்றிருக்கிறது. அதுகுறித்து தி. மு. கழகத்தின் பொதுக்குழு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது என்றால், மேற்கொண்டு அந்தப் பிரச்சினையைக் கவனிக்கும் நோக்குடன் என்னை அணுகுவார்கள், என்று தானே நான் எதிர்பார்க்கவேண்டும். எதிர்பார்த்தேன்—"ஜனசக்தி" பதில் அனுப்புகிறது!

"திராவிடநாடு" இதழிலே வெளியிடப்பட்ட கட்டுரை அல்ல, நான் கம்யூனிஸ்டு கட்சியின் கவனத்துக்குக் கொண்டுவந்தது. கேட்டால் கேள், இல்லையானால் போ வெளியே!—என்ற குரல் கிளப்ப முடியாத, ஒரு ஜனநாயக அமைப்பு தி. மு. க. அதன் பொதுக் குழு கூடி, 45 உறுப்பினர்கள் விரிவாக விவாதித்து, கருத்துகள் ஒன்றோடொன்று மோதி, புயல் அடித்துப் பிறகு, ஏகமனதாகச் செய்யப்பட்ட தீர்மானத்தை, நான் வெளியிட்டேன், விளக்க உரையுடன்.

இதற்கு கம்யூனிஸ்டு கட்சியின் பொதுக் குழுவோ, அவர்களின் தேர்தல் பணிக் குழுவோ கூடிப் பரிசீலனை செய்து அறிக்கை தந்திருக்கவேண்டும்—முறைப்படி—ஆனால் எனக்குக் கிடைத்திருப்பது "ஜனசக்தியின்" பதில்! சரியா?

நான், எந்த தி. மு. க.வின் கூட்டுறவு நாட்டு மக்களின் விடுதலைக்குத் தேவை என்று கம்யூனிஸ்டு நண்பர்கள் என்னிடமும் என் தோழர்களிடமும் கூறிவந்தார்களோ, அந்த தி. மு. க. வின் பணியிலே ஈடுபட்டுள்ள பொறுப்பாளர்களைக் கூட்டிவைத்துக் கலந்து பேசி, கசப்பைப் போக்கி, கிலேசத்தை நீக்கி, ஒரு தீர்மானத்தை உருவாக்கி அனுப்புகிறேன், கம்யூனிஸ்டு நண்பர்களின் பார்வைக்கு—"ஜனசக்தி" ஸ்டாலினுடைய கருத்தை எனக்கு அளிக்கிறது! சீனநாட்டுப் படத்தைக் காட்டிப் பாடம் கூறுகிறது: கம்யூனிஸ்டு கட்சியின் செயற்குழுவினரின் கருத்து என்ன, கம்யூனிஸ்டு ஆதரவாளர்களின் எண்ணம் என்ன, என்பதைக் கூறவில்லை. நான், இந்த முறை கண்டு திடுக்கிடுகிறேன். நான், உள்ளத்தைக் கேட்கிறேன், உலக வரலாற்றை அல்ல!! நான் கேட்பது, உறுதியான, கண்ணியமான நேசம்—எந்தக் காயை எந்தப் பக்கம் நகர்த்துவது எனும் சதுரங்க விளையாட்டல்ல—அதற்கு இது நேரமுமல்ல, அதற்கு ஏற்றவனும் நான் அல்ல.

கம்யூனிஸ்டு கட்சியினர் திராவிட நாடு பிரச்சினையை ஆதரிக்கிறார்கள் என்ற எண்ணம் வெகுவாகப் பரவி இருக்கிறதே, கம்யூனிஸ்டு நண்பர்கள் பேசுகிற கூட்டங்களிலெல்லாம், தி. மு. க. எங்களை ஆதரிக்கிறது, என்று உவகையுடனும் உரிமையுடனும் பேசி வருகிறார்களே, இவ்வளவு 'சொந்தம்' ஏற்பட்டான பிறகு, திராவிடநாடு பிரச்சினையை ஆதரிக்கிறேன் என்ற உறுதிமொழிச்சீட்டு அளிப்பதிலே என்ன தடை இருக்கப் போகிறது, என்று எண்ணித்தான் மதுரையில் தீர்மானம் உருவாக உதவினேன். "ஜனசக்தி"யோ, திராவிடநாடு பிரச்சினை பற்றிய, ஆய்வுரை தருகிறது. ஆய்வுரைகளை நான் அருவருடபவனல்ல, விவாதிக்க மறுப்பவனுமல்ல; ஆனால் அவர்களே மேடைகளிலே, திராவிடநாடு பிரச்சினையை ஆதரித்துப் பேசிவருதாக, தி. மு. க. தோழர்கள் கூறினதால், இந்த நேரத்தில், களத்திலே பொது எதிரி ஆணவச் சிரிப்புடன் நின்று கொண்டு, கருப்பும் சிகப்பும் கலந்து வந்துதான் ஒரு கை பார்க்கட்டுமே என்று அறைகூவும் சமயத்திலே, ஆய்வுரையை அளிக்கும் காரியத்திலே கம்யூனிஸ்டுகள் ஈடுபடமாட்டார்கள் என்று எண்ணினேன்.

ஆனால் "ஜனசக்தி" இனம், தேசிய இனம், தேசிய இனங்கள், இனவாரி அமைப்புகள், என்று அச்சுவேறு ஆணிவேறாக எடுத்து எடுத்து, விமரிசனமும் விளக்கமும் தரமுற்படுகிறது. சாதாரண காலத்திலே, எனக்கு, இது மிக மிகச் சுவை தரும் சம்பவம்—இப்போது, வளர்ந்து வரும் நேசத்தைக் கருகச் செய்யும் போக்காக இது உருவெடுக்கும் என்ற காரணத்தால் கவலையூட்டுவதாக இருக்கிறது.

'திராவிடத் தனிஅரசு' என்ற திட்டத்துக்கு ஆதரவு தருவதாக உறுதிமொழி தருமாறு கம்யூனிஸ்டுகளைக் கேட்டிருக்கிறேன்—அந்த உறுதிமொழி தருவது, திராவிடத் தனி அரசுக்கு தேவையான விளக்கங்களை விவாதித்து முடிவு செய்யும் உரிமையை ஒழித்து விடாது. இதைக் கம்யூனிஸ்டுகளின் கவனத்துக்குக் கொண்டுவரவிரும்புகிறேன். கம்யூனிசம் ஏற்பட்டுவிட்டால் 'திராவிடநாடு' தேவையில்லை. என்று பெரியார் திண்டுக்கல்லில் பேசியதாக வந்த செய்தி, "எதிரிகளின் விஷமம்" என்று பெரியாரே கூறிவிட்டார்—எனவே கம்யூனிசம் பேசும் எங்களிடம் திராவிட நாடு கேட்கலாமா என்று வாதிடுவதும் முறையல்ல.

வளர்ந்துகொண்டு வரும் ஒரு கழகம், நேசத்தை வரவேற்கிறது, அதற்கு ஒரு அடையாளம் கேட்கிறது—அடையாளம், கம்யூனிஸ்டுகளைச் சந்தேகித்து அல்ல, கழக ஆதரவாளர்களிடமும் பொது மக்களிடமும் காட்டவேண்டிய பொறுப்பு இருப்பதால்.

திராவிட நாடு பிரச்சினையிலே உண்மையிலேயே, கம்யூனிஸ்டுகளுக்கு விருப்பம் இல்லை, என்றால், சுவைதரும் சுற்றுச் சுழல் இன்றி, நம்பிக்கை யூட்டும் இருபொருள் வாசகங்களின்றி, திராவிட நாடு பிரச்சினையை ஆதரிக்க முடியாது என்று துவக்க முதலே சொல்லி வந்திருக்கலாம்.

"கலியாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனி! உனக்கு நல்ல சட்டைகள் தைத்துக்கொள்—பெண்ணுக்கும் பிடித்தமான சேலை

பொதுக்குழு உறுப்பினர்களுக்கு

—✲—

தோழர்களே!

மதுரைத் தீர்மானம் பற்றி கம்யூனிஸ்டு பதில் என்ற தலைப்பில் ஜனசக்தி இதழ் வெளியிட்ட கட்டுரையைக் கண்டிருப்பீர்கள்.

அது பற்றியும், மேற்கொண்டு, தேர்தலின் போது நாம் கொள்ள வேண்டிய போக்குபற்றியும், தங்கள் கருத்தை அறிய விரும்புகிறேன் ஆகவே தயைசெய்து, உடனே தங்கள் கருத்தைக் கடிதமூலம் எனக்கு அறிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்

அண்ணாதுரை

வாங்கிக்கொடு'', என்று தகப்பனார் கூறக் கேட்டு, திருமணம் தனக்குத்தான் என்று எண்ணிக் களித்த மகனிடம், தகப்பனார் "உனக்கல்லடா, எனக்கு''—என்று சொன்னால் எவ்வளவு மனம் கொதிக்கும், அதுபோல, திராவிடநாடுபிரச்சினையைக் கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கிறார்கள் என்று சுவைதரும் விதமாகக் கம்யூனிஸ்டு நண்பர்கள் பல இடங்களிலே பேசிவிட்டு, திராவிடத் தோழர்கள் பலருடைய மனதிலே ஆவலையும் நம்பிக்கையையும் எழச்செய்துவிட்டு, தீர்மான வடிவிலே அதே பிரச்சினைவருகிறபோது, தத்துவ விளக்கமும், தயக்கமும் காட்டினால், உண்மையிலேயே நேசத்தை உருவாக்கவேண்டும் என்று எண்ணும் என் போன்றவர்களுக்கு எல்லாம், மனம் பதறத்தான் செய்யும். இழந்த காதலாகக் கூடாது இந்த நேச முயற்சி, என்பது என் எண்ணம்.

பேரம்பேசுவதாகத் தயை செய்து கருதவேண்டாம் என்று கூறிக் கொள்கிறேன்—காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை உதிரும் மலராகிவிடக் கூடாது இந்த 'நேசம்'—இது உறுதியுடையதாய், உள்ளத்துக்கு உவகை தருவதாய், உண்மையான கூட்டு முயற்சிக்கு உதவி செய்வதாக அமைய வேண்டும் — ஓட்டுக்கு மட்டும் பயன் படும், உருப்படாத் திட்டமாகிவிடக் கூடாது. இதற்காகத்தான், 'நிபந்தனை' என்று குறிப்பிட்டேனே தவிர, வேறு காரணமில்லை.

திராவிட நாடு பிரச்சினையிலே கம்யூனிஸ்டுகளுக்கு விருப்பம் இருந்தால் நான் கேட்கும் உறுதிமொழிச் சீட்டு தருவதிலே, தடை இருக்கக் காரணம் இல்லை.

திராவிட நாடு பிரச்சினையிலே கம்யூனிஸ்டுகள் சம்மதம் தராவிட்டால் திராவிடத் தோழர்களிடம் அவர்கள் மனப்பூர்வமான, உருவான, பயனளிக்கத் தக்க, உதவியைப் பெறுவது முடியாததாகிவிடும்.

நாங்கள் பெரியதோர் கட்சி, உலகெங்கும் வியாபித்துள்ள கட்சி, எங்களைப் போய், கையொப்பம் கேட்பதா—இப்படி தழதழத்த குரலில், தனிப்பட்ட முறையிலே, கம்யூனிஸ்டு நண்பர்கள் கூறிடக் கேட்கிறேன்.

எந்த திராவிடநாடு பிரச்சினையை உயிருக்குயிராகக் கருதுகிறார்களோ, அந்தப் பிரச்சினைக்குக் கூட ஆதரவு பெறாமல், எங்கள் உழைப்பின் உருவமான, உணர்ச்சியின் சித்திரமான ஒரு இயக்கதகதை, எந்த இயக்கத்துக்காக அரசியல் சபலங்களை எல்லாம் அடக்கிக் கொண்டு, தன்னலத்தை மறுத்து, தடியாட்சி நடாத்துபவர்களின் தாக்குதல்களைக் கண்டும் கலங்காது, குன்றத்தூரையும், தேனியையும் தாங்கிக்கொண்டு வந்திருக்கிறோமோ, அந்த இயக்கத்தை, நிபந்தனையற்ற முறையிலே மட்டுமல்ல, நமது இயக்கத்தின் இதய ஒளியைப் பாழாக்கும் வகையிலே, சென்று பணியாற்றச் சொல்கிறாயே, செயலாளனே! இதுதானா உன் செயல்?—என்று கேட்பர், தி. மு. க.வுக்காகத் தங்களை ஒப்படைத்துள்ள ஆயிரமாயிரம் இளைஞர்கள். அவர்கள், கண்ணீரைத் துடைத்த வண்ணம் கூடினவர்கள், வியர்வையும் இரத்தமும் சிந்தச் சிந்தப்பாடுபட்டுவருபவர்கள். வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி ஒரு இயக்கத்தை வளர்த்துவருபவர்கள், 'கூத்தாடி' காசு திரட்டி, கழகம் அமைப்பவர்கள், குலப்பெருமை, குடும்ப ஆதிக்கம் ஜாதிக்கட்டு, போன்ற பலதடைகளை மீறிப்பணியாற்றி வருபவர்கள், அவர்களின் உழைப்பை நான் மதிக்கிறேன், எனவேதான் அவர்களின் உழைப்பால் உருவாகியுள்ள தி. மு. க. வின் கூட்டுறவு கோருபவரிடம், தி. மு. க.வின் உயிர்ப் பிரச்சினைக்கு உத்திரவாதம் கேட்கிறேன். அது என் கடமை—எனக்கு என் தோழர்கள் அளித்துவரும் ஆதரவுக்கு நான் காட்டவேண்டிய கடமை. எண்ணற்ற இளைஞர்கள்—அவர்களிலே மிகப் பலர், சரிதம் படித்தவர்கள், சமதர்மம் தெரிந்தவர்கள், ஸ்டாலினையும் சீனுவையும் கூடத் தெரிந்தவர்கள்தான் — அவர்கள் கேட்கின்றனர், திராவிட நாடு பிரச்சினையைக் கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கிறார்களா, இல்லையா, என்பதைக் கேட்டறிந்து கூறு. ஆதரிப்பதாக உறுதி கிடைத்தால் ஒரு வார்த்தை சொல், உயிரைப் பணயம் வைத்து உழைக்கிறோம், அதற்கு வழியில்லை என்றால், காரணம் கேட்காமல், நிபந்தனையில்லாமல் கம்யூனிஸ்டுகளை ஆதரிப்பது, திராவிடநாடு பிரிவினையை மறுக்கும் காங்கிரசார் இருக்கும் இடத்திலே திராவிடநாடு பிரிவினைக்கு உத்தரவாதம் தரமறுக்கும் கம்யூனிஸ்டுகளைக் கொண்டு வந்து அமர்த்துவது, எந்தவகையான நியாயம், எந்தவகையான அரசியல், எடுத்துக்காட்டு, என்று கேட்கின்றனர் — கோபமும் கொந்தளிப்பும் கொண்டவர்களாய்! நான், அவர்களுடைய நியாய வாதத்தை மதிக்கிறேன்—அவர்களுடைய உள்ளம்தான் எனக்கு வழிகாட்டி. எனவேதான், அவர்களுடைய உள்ளத்தை, பொதுக்குழு மூலம் கண்டறிந்த பிறகு, அறிக்கை வெளியிட்டேன். அந்த அறிக்கை, தி. மு. க. வின் அன்பழைப்பு. "ஜனசக்தி" யிடம் விவாதம் துவக்கும், கட்டுரை அல்ல.

எனவே, மீண்டும், கடைசி முறையாக, கனிவுடன், தூய எண்ணத்துடன், கம்யூனிஸ்டுகளை அழைக்கிறேன், உறுதி கூறுவீர், உதவி பெறுவீர்—என்று.

தேர்தலுக்காக மட்டுமா இந்தக் கூட்டுறவு—நீண்ட காலத்துக்கு—இரண்டும் இழைந்து போகும் அளவுககுக் கூட்டுறவு ஏற்படவேண்டும் என்பதே எமது விருப்பம் என்கிறார்கள் கம்யூனிஸ்டுகள். மகிழ்ச்சி. நன்றி. நானும் அதை விரும்புகிறேன். ஆனால், நேசம் துவக்கப்பட இந்தச் சாதாரண உறுதிமொழி தருவது, எந்த வகையிலே, நாம் காணும் இன்பந்தரும் எதிர்காலத்தைக் கெடுக்கும் என்று கேட்கிறேன் — மாறாக, எதிர்காலம் பலமுள்ளதாகும். எனவே, வருக, வருக, என மீண்டும் அழைக்கிறேன். எவ்வளவு பெரிய அக்னிப் பரீட்சைக்கும் ஈடுகொடுக்கவல்ல, கழகத்தின் சார்பாக அழைககிறேன்.

திராவிடநாடு பிரச்சினையைக் கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கிறார்கள் என்று நம்பிக்கை உலவுவதாலேதான், திராவிடத் தோழர்கள், கம்யூனிஸ்டுகளுடன் உறவாடி வருகிறார்கள். இந்த உறவு உறுதிப்படுவதற்குத்தான், உறுதிமொழிச் சீட்டு கேடகிறேன். ஒரு சீட்டுககு ஓராயிரம் ஓட்டு என்று பேரம்பேச அல்ல—உறுதி மொழிச் சீட்டு—, நேசத்தின் துவக்கம் படிப்படியாக நேசம் வளருவது—பிறகு, நாட்டின் கேடு அவ்வளவும் களையப்பட்டு, சமதர்ம ஆட்சி மலருவது — மாஸ்கோ மணம் கமழுவது, என்ற முறையிலே கேட்கிறேன்.

உதிரிகளும் சுயேச்சைவாதிகளும் வேண்டுமானால், உறுதி மொழிச் சீட்டிலே கையொப்பமிடுவார்கள்—என்று நையாண்டி பேசுவது பலன் தராது, உருவாகிவரும் பலனையும் பாழ்படுத்தும். பக்கத்துத் தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்சிவிட்டு, நம் தோட்டத்து மர நிழலில் அமர்ந்து கஞ்சிகுடிப்பது போல, கம்யூனிஸ்டுக்குக் கைகொடுப்பது, கூடிப் பணியாற்றுவது தேர்தலின் போதும், பிறகும் —ஆனால் அவர்களோ, நமது திராவிட நாடுபிரச்சினைக்கு,"வகுப்புகள்' நடத்துவர், விவாதம் நடத்துவர் ஆதரவு அளிக்கமாட்டார்கள்.என்ற நிலைமை இருக்கிறதே, இது தி. மு. க. தோழர்களுக்கு, மிகமிகச்சேலிக்குரியதாக மட்டுமல்ல, கேவலமானதாகவும் தோன்றுகிறது. உதிரிகளையும் சுயேச்சைகளையும், இவ்விதம் உருக்கமாக அழைத்தோமில்லை— அவர்களிலே நூறுபேருக்குக் கையொடபமிட்டனுப்பி யிருக்கிறார்கள்—இன்றைய 'உதிரிகளை' உருவான அரசியல் சக்தியாக நாளைய தினம் மாற்ற முடியாதா என்று கேட்கிறேன். —அரசியலிலே இது சாத்தியமற்றதா? எங்களை விட்டால் வேறுயார், என்று கடைசிவரையில் இருந்துவிடவேண்டாம், காலம் அதிகமில்லை, என்று மீண்டும் கவனப்படுத்துகிறேன்.

புதிதாக அரசியலில் நுழைபவர்கள் பலர் இருக்கிறார்கள், சுயேச்சையினராக. அவர்கள் அவ்வளவு பேரும், எந்த ஒரு அரசியல் கொள்கையும் அறியாதவர்கள், அறியமுடியாதவர்கள், அறிய மறுப்பவர்கள் என்று கூறிவிடமுடியாது. அவர்களில், பலர், அரசியல் பிரச்சினைகளை இதுவரை நேரடியாகத் தொடர்பு கொண்டு கவனித்தறியாதவர்களாக இருந்திருப்பினும், எப்போதும் அதே போக்கிலே இருந்துவிடுவார்கள் என்று கூறிவிட முடியாது. அத்தகையவர்களில் நூறுபேர் போல், திராவிட நாடு பிரச்சினையை ஆதரித்து ஒப்பந்தக் கடிதங்களை அனுப்பி இருக்கிறார்கள். தி. மு. க. வின் ஆதரவு பெற்று, சட்டசபையிலே இடம் பெறமுடியும். அவர்களிலே ஒரு பத்து, இருபது, நேர்மையாளர்கள் படிப்படியாகத் திராவிட இயக்க ஆதரவாளர்களாகவும், சட்டசபையிலே தி. மு. க. வின் சார்பாகப் பணியாற்ற வல்லவர்களாகவும் உருவெடுக்கக்கூடும் — நாமும் அவர்களை அந்தவகையான நிலைமைக்குக் கொண்டுவரவும் முடியும். இந்த வாய்ப்பு இருப்பதை யாரும் மறுக்கமாட்டார்கள் —கம்யூனிஸ்டுகள் உட்பட. உதிரிகள்தானே அவர்களெல்லாம் என்று கூறலாம், மாலையாகத் தொடுப்பது முடியாத காரியமல்ல, என்பதைக் கவனப்படுத்துகிறேன்.—அதுவும் சீமான்களின் சிங்காரப் பதுமையாக இருந்த கட்சியிலே காலடி எடுத்து வைத்து, பையப்பைய, ஆனால் விடா முயற்சியுடன் பணியாற்றி கம்யூனிஸ்டுகளும் மதிக்கக் கூடிய மக்கள் இயக்கத்தை மலரச் செய்தவர்கள் நாம்—நம்மாலே முடியாது என்று சென்றகால நிகழ்ச்சிகளைக் கோர்வைப்படுத்திப்பார்ப்பவர் எவரும்கூறமாட்டார்கள்.நாமே,பூர்ஷுவாக்களாகவும், தொல்லை தருபவர்களாகவும், வகுப்புவாதிகளாகவும், தானே, தெரிந்தோம் கம்யூனிஸ்டுகளுக்கு — திராவிடர் கழகம் ஆன பிறகும்! இப்போது, அதே பெரியார், அதே தோழர்கள்தான் திராவிட இயக்கத்தில்! ஆனால் தீவிர சிந்தனையின் பயனாகக் கம்யூனிஸ்டுகளே இன்று கூறுகிறார்களல்லவா, இவர்களெல்லாம் பிற்போக்காளர்கள் அல்ல—ஜனநாயகக் கூறுகள், என்று. அதுபோலவே, இன்றைய உதிரிகளையும், உருவான, உபயோகரமான அரசியல் சக்திகளாக மாற்றிக் காட்ட முடியும்—மாற்றிக் காட்டின பிறகு, நமது கம்யூனிஸ்டு நண்பர்களும், 'ஆமாம்' என்பர்.

எனவே, அந்தி நேரத்திலே ஆள்வார் செட்டிகடைதான் இருக்கும், அங்கே ஆறுபலம் குறையும் அரைவீசை சாமான் வாங்கினால், என்ருலும் என்ன செய்வது வாங்கித்தானே தீரவேண்டும், என்ற முறையிலே காரியம் நடைபெறும் என்று தவறாகக் கணக்கிடவேண்டாம் என்று கம்யூனிஸ்டு நண்பர்களுக்குக் கூறுகிறேன், தி. மு. க. வின் பொறுப்பாளர்கள் கூடி இந்தப் பிரச்சினையைவிவாதித்து முடிவு செய்த முறைபோல, கம்யூனிஸ்டு கட்சியினர் உடனே கூடி விவாதித்து பெரும்பாலனவர்களின் கருத்தை அறியவேண்டும் முடிவு அவ்விதமான முறை மூலம் தெரிய வேண்டும். கம்யூனிஸ்டு கட்சித் தோழர்களும், ஆதரவாளர்களும், தங்கள் கட்சியை இந்தப்பாதையில் செல்லும்படி கேட்டுக் கொள்ள வேண்டும். அரசியலிலே ஒரு சம்பவமல்ல இது — அரசியலிலே மிக முக்கியமான திருப்பம்—மகத்தான விளைவுகளை உள்ளடக்கிய திருப்பம் —இதைக் கவனிக்க, நான் மட்டும் போதாது, கூடாது என்பதற்காகத்தான், தி.மு. க. பொதுக்குழுவைக் கூட்டி, விரிவான விவாதத்துக்குப் பிறகு ஒரு முடிவு காணப்பட்டது. அதேபோலவே, கம்யூனிஸ்டுகட்சியும் இந்த முக்கியமான 'அரசியல் திருப்பத்தை' கட்சியின் பொறுப்பாளர்களின் விவாதத்துக்கு வைத்திருக்கவேண்டும். அந்த முறை

திராவிடர் கடமை

—✿—

பார்ப்பனரல்லாதார் ஆட்சி வேண்டும் என்றோம்; இலட்சியம் போதுமானதாக இல்லை.

*

சுயமரியாதை மலர வேண்டும் என்று கூறினோம். சுலபமான காரியமாக வில்லை அந்த இலட்சியம்.

*

பிறகு தான், திராவிடநாடு திராவிடருக்கு என்றோம். திரண்டனர் இளைஞர்கள் நாடெங்கும்.

*

கட்சிகளெல்லாம் இப்போது தத்தமது 'முரசு' கொட்டிக் கொண்டு தேர்தலில் ஈடுபடுகின்றன. நாம் தேர்தலிலே ஈடுபடவில்லை.

*

நம்மை நேசம் கொண்டாடி அழைக்கின்றனர். நமது இலட்சியமான திராவிடநாடு திராவிடருக்கே என்பதை ஆதரிக்கிறீர்களா என்று தி. மு. க. கேட்கிறது. அந்த 'முரசு' கொட்டாதிர் எமது முரசு கொட்ட வாரீர் என்று அழைக்கிறது கம்யூனிஸ்டு கட்சி.

*

சரியல்ல, என்கிறது தி. மு. க. சரியான வழியும் காட்டியிருக்கிறது, மதுரைத் தீர்மான மூலம்.

*

மதுரைத் தீர்மானத்துக்கு ஆதரவுதிரட்டுவது திராவிடரின் கடமை.

இதைவிட அது மேல்

திராவிட நாடு பிரச்சினையை ஆதரிக்கிறேனா இல்லையா, என்று கேட்காதே நேசக் கட்சியாகலாம், வா!—என்று கம்யூனிஸ்டு கட்சி அழைக்கிறது.

இதைவிட, திராவிட நாடு பிரச்சினை தேவையா, அல்லது பொதுஉடைமை ஆட்சி தேவையா, என்று விவாதித்து, கழகத்தையே மாற்றிவிடலாமே.

இப்போது கம்யூனிஸ்டுகள் கூறுவதைக் கேட்டுச் சகித்துக் கொள்வதைவிட, அது நல்லது. இதைவிட அதுமேல்!!

வெற்றிக்கு வழி

கம்யூனிஸ்டும் திராவிட இயக்கமும் ஒன்று சேர்ந்துகொண்டன—என்று அலறித் துடித்துக் கேட்கிறது காங்கிரஸ் பாசீசம்.

★

ஆமாம்—அது மட்டுமல்ல. திராவிட நாடு பிரச்னையை கம்யூனிஸ்டு ஆதரிக்கிறது, சமதர்ம திட்டத்தைத் திராவிட இயக்கம் ஆதரிக்கிறது, அந்த அடிப்படையிலே அவர்களின் நேசம் உருவாகி இருக்கிறது என்ற 'செய்தி' உருவானால், ஆதிக்க்காரர் அனைவரும் அலறுவர்—ஐ. நா. சபை வரையில் திராவிட நாடு பிரச்சினை சென்றுவிடும்.

அதுபோலவே, கம்யூனிஸ்டு கட்சிக்கு, முற்போக்குக் கட்சிகளை எல்லாம் ஒரு முகாமுக்குள் கொண்டு வரும் செல்வாக்கு இருக்கிறது என்பது உலகெங்கும் விளங்கும் — கம்யூனிஸ்டு கட்சியின் மாண்பு வளரும்.

மதுரைத் தீர்மானம், இந்த மகத்தான விளைவு வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் திட்டப்பட்டது.

★

எனவே, மதுரைத் தீர்மானத்தை வலியுறுத்துவது, நாம் இதுநாள் வரை பாடுபட்டுவரும், திராவிட நாடு திராவிடருக்கே என்ற இலட்சியத்துக்கு, வெற்றி தேடிப் பெறுவதாகும்.

கையாளப்பட்டால், நான் நிச்சயமாக நம்புகிறேன், மதுரைத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளலாம்என்ற முடிவு கிடைத்திருக்கும். தி.மு.க. நேசக்கட்சியான கம்யூனிஸ்டு கட்சியிடம் இதை எதிர்பார்கிறது.

இன்றைய 'உதிரிகளை' நம்பிக்கொண்டு, தி. மு. க. போகலாமா என்று பேசிப் பயனில்லை—இன்று உதிரிகளாக உள்ளவர்கள், நாளை கம்யூனிஸ்டு ஆதரவாளர்களாகக் கூடஆகமுடியும். தி.மு. க.போன்ற முற்போக்குச் சக்தியின் கூட்டுறவால், அவர்களின் அரசியல் மனப்போக்கே மகத்தான மாறுதலைப் பெறவும் கூடும். 'உதிரிகளிலே'சிலரைக் கம்யூனிஸ்டுகள் ஐக்கிய முன்னணி அபேட்சகர்களாக்கிக் கொள்ளவில்லையா — அந்த 'உதிரிகள்' மார்க்ஸ் தெரிந்தவர்களா' என்று பரீட்சை பார்க்கப்பட்டது? அல்லது அரசியல் பரீட்சை நடத்தியா சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்? எனவே சுயேச்சைகளெல்லாம், உதிரிகள், எனவே அவர்களை நம்பாதே, எங்களைநம்பு, ஏனெனில் நாங்கள் கம்யூனிஸ்டு கட்சியினர், என்று கூறுவது, பேச்சுக்கு மெருகாகுமே தவிர, காரியத்துக்கு உபயோகமாகாது. எனவே, உடனடியாக மதுரைத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியும். முடியாது, என்ற திட்டவட்டமான பதிலளிக்கும்படி, கம்யூனிஸ்டு கட்சியினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஐக்கிய இந்தியா எனும் இலட்சியம் பெரிது, மேலானது, தியாகிகளின் இரத்தத்தில் உருவானது, என்று ஒருபுறம் சித்தரித்து, மறுபுறம் (அதே கட்டுரையில்) அந்த ஐக்கிய இந்தியா, இன்னின்ன கேடுகளைச் செய்து கொண்டிருக்கிறது என்ற பட்டியலைக் காட்டிவிட்டு, இறுதியாக நாங்கள் கூறும் ஐக்கிய இந்தியாவில் இந்தக் கேடுகள் களையப்படும். தேசிய இனவட்டாரங்களுக்கு உரிமை இருக்கும் என்று நல்வாசகு கூறப்படுகிறது.

கிருபளானி இதையே கூறுகிறார்—ஜெயப்பிரகாசர் இதற்குச சம்மதிக்கிறார், திருப்தி ஏற்படுகிறதா? இல்லையே! ஐக்கிய இந்தியாவை நடத்திச் செலலும் முறையும் சரியில்லை, அமைப்பும் பழுதுள்ளது, அலுவலர்களும் மோசமானவர்கள் என்றுநாங்கள் சொன்னால் எல்லாம் சரியாகிப்போகும் எங்களை அனுப்புங்கள் என்கிறார்கள் கம்யூனிஸ்டுகள். இது, திராவிட நாடு கேட்கும்நம்மை எப்படித்திருப்திப் படுத்த முடியும்! நல்லவர்கள் கரம் பட்டால் கெட்டதும் நல்லதாகி விடும் என்ற சித்தாந்தமல்லவா இது. — இதற்காகவா, இவ்வளவு உழைப்பு, இவ்வளவு எழுச்சி, இத்துணை கிளர்ச்சி—கம்யூனிஸ்டு நண்பர்களுக்கு மீண்டும் கூறுகிறேன், திராவிடநாடு பிரச்சினை ஜீவாதாரமானது — அதை மறுப்பவர்கள் இருக்கலாம் — இருக்கின்றனர் — அதைக் காட்டுக் கூச்சல் என்கிறார் காமராஜர் — வாழ்க காமராஜர்! — ஆனால், நீங்கள் கூறுவது என்ன, ஆதரவா, ஆய்வுரையா, மறுப்பா, தயை செய்து, தெளிவாக, திட்டவட்டமாக கூறுங்கள் என்று கேட்கிறோம். "ஜனசக்தி', இதுபற்றிய விவாத உரையின்போதுகூறுகிறது இது, முதலாளித்துவ தேசிய திட்டம என்று, வேண்டாம் அன்பரே! வேண்டாம், புண்படுத்தாதீர் எமது மனதை! முதலாளித்துவத்துக்கும் எமக்கும் தொடர்பு படுத்தாதீர் — நாங்கள் சமதர்மிகள் — திராவிடச் சமர்தர்மிகள்—ஜெர்மன் சமர்தர்மிகள் இல்லையா — பிரஞ்சுச் சமதர்மிகள் இல்லையா — பர்மியச் சமதர்மிகள் இல்லையா—நேபாளச் சமதர்மிகள் இல்லையா — நாம் எல்லாம் பார்த்துக்கொண்டே இருக்கும்போதே உருவான பாகிஸ்தானில் சமதர்மிகள் இல்லையா—அதுபோல நாங்கள் திராவிடச் சமதர்மிகள். எங்களுடன் நேசம் கொண்டாட வரும் நேரத்திலாவது, எங்களைப் புண்படச் செய்யாதிருக்கக் கேட்டுக்கொள்கிறேன். இதைவிடக் காங்கிரசார்போல், வெட்ட வெளிச்சமாகக் கூறிவிடுங்கள், திராவிடநாடு பித்தர் திட்டம் என்று. சரி மேலும் கொஞ்சம் உழைப்போம்—மேலும் கொஞ்சம் இரத்தம் சிந்துவோம் வியர்வையைக் கொட்டுவோம் — இன்னும் கொஞ்சம் ஆதரவுதிரட்டுவோம் — பிறகு மறபடியும் கம்யூனிஸ்டுகளைப் பார்த்து, ஐயன்மீர்! இப்போது என்ன சொல்கிறீர்கள்? இனியேனும் திராவிடநாடு பிரச்சினையை ஆதரிக்கிறீர்களா? என்று கேட்போம் — என்ற முறையிலாவது, எங்கள் வேலையை நாங்கள் கவனித்துக்கொள்வோம். அதையும் செய்யாவிடாமல், பொதுவாக ஒரு ஆவலை, ஒரு நம்பிக்கையைக்கிளப்பி விட்டு விட்டு, கிட்டே நெருங்கி வருகிறபோது, திராவிடமாவது நாடாவது அதெல்லாம் முதலாளித்துவ தேசிய திட்டமல்லவா, அதைஸ்டாலின்மறுக்கிறாரே,சைனு வெறுக்கிறதே என்று கூறி வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சாதீர்.

தெளிவாக மறுபடியும் கூறுகிறேன், முற்போக்கான எந்தத் திட்டம் தீட்டினாலும், கிளர்ச்சியில் ஈடுபட்டாலும் தி. மு. க. அதை ஆதரிக்கும் — ஆனால் தி. மு. க. வின் கூட்டு முயற்சி தேர்தலின்போது தேவை என்றால், நேசம் அதிலிருந்து துவங்க வேண்டுமென்றால், தி. மு. க. தோழர்கள் நிச்சயமாக, மாஸ்கோவை அல்ல, பீகிங்கை அல்ல, மதுரையைத்தான் காட்டுவார்கள். தி. மு. க. தோழர்களெல்லாம், மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் மாசேதுங் ஆகியோரிடம் மட்டற்ற மதிப்புக்கொண்டவர்கள், எனினும் அவர்கள் திராவிநாடு எனும் இலட்சியத்தைத் தமது உயிரெனக் கொண்டுவிட்டனர் — அதற்கு ஆதரவு தருபவர்களைத்தான் தோதலிலும் பிறகும் தோழர்களாகக் கொள்வர். ஜனசக்தியின் பதில் இந்தச் சூழ்நிலையையா உண்டாக்குகிறது. விவாதமல்லவா செய்கிறது!!

அப்படி ஒன்றும், திகைக்கவைக்கக்கூடிய புதிய உண்மைகளை உள்ளடக்கியதுமல்ல, ஜனசக்தியின் பதில்.

இன அரசு கூடாது என்று ஒரே அடியாகக், காங்கிரசார் போலக் கூறிவிடவில்லை.

திராவிட இனம் என்ற ஒன்று இடையவே கிடையாது, அது வெறும் கற்பனை என்று கூறும் காங்கிரசார் போலவும் கூறிவிடவில்லை.

இரண்டையும் ஒப்புக்கொள்கிறது ஜனசக்தி, ஒப்புக்கொண்டானபிறகு கூறுகிறது, ஒரு காலத்திலே திராவிட இனம் என்று இருந்த இனமானது, பிறகு, தமிழ் தேசிய இனம், தெலுங்கு தேசிய இனம், மலையாள தேசிய இனம், கன்னட தேசிய இனம் என்பதாகத் தனித்தனியாக உருவெடுத்துவிட்டன—எனவே இந்த தேசிய இனங்களின் சம்மதம் பெற்ற ஒரு ஆட்சியை ஆதரிக்கலாமே தவிர, திராவிடத் தனி அரசு என்பதை ஆதரிக்க முடியாது என்று வாதாடுகிறது. திராவிடநாடு கோரும் நாம், இதைத் தெளிவாக நமது திட்டத்திலேயே கூறுகிறோம், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய வட்டாரங்களின் சம்மதம் பெற்று, திராவிடநாடு அமையும் என்பதைத் தெளிவாக்கி இருக்கிறோம். திராவிடநாடு, என்பதையே கூட்டாட்சி என்று விளக்கி இருக்கிறோம். அந்தக் கூட்டாட்சியில், சேரும் பகுதிகளுக்குப் பிரிந்து போகும் உரிமையும் சட்டபூர்வமாக இருத்தல் வேண்டும் என்பதையும் கூறியிருக்கிறோம்.

கூட்டாட்சி அமைத்துக்கொண்டு வாழுவதற்குத் தேவையான பொறுத்தங்கள், பாஞ்சாலத்துக்கும் தமிழகத்துக்கும் இருப்பதை விட, அசாமுக்கும் ஆந்திராவுக்கும் இருப்பதைவிட, குஜராத்துக்கும் கேரளத்துக்கும் இருப்பதைவிட, மகாகோசலத்துக்கும் கன்னடத்துக்கும் இருப்பதைவிட, தமிழகம், கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகியவைகள் கூட்டாட்சி அமைப்பதற்கான பொறுத்தங்கள் அதிகம் என்று கூறுகிறோம். இது எந்த வகையிலே உண்மைக்கு மாறுபாடானது? வேறு சமயமாக இருந்தால் இதுபற்றிய விரிவான விவாதத்தை நாமே வலியச்சென்று வரவேற்போம் — ஆனால் இப்போது,

---

மக்களின் எழுச்சிக்குரல்

★

திராவிடநாடு திராவிடருக்கே! — பல ஆண்டுகளாகத் தமிழகமெங்கும் முழக்கமிட்டோம்.

காங்கிரசும்—கம்யூனிஸ்டும் கூட்டாக இருந்துகொண்டே நம்மை எதிர்த்தபோதும், முழக்கமிட்டோம்.

இப்போதுதான் இதற்கு முன்பு நமது குரல் கேட்கமுடியாதபடி அமைக்கப்பட்டிருந்த அரண்களைத் துளைத்துக்கொண்டு செல்கிறது, அந்த முழக்கம்.

அந்த முழக்கத்துக்காக, நிந்திக்கப்பட்டோம், கண்டிக்கப்பட்டோம், கேலி செய்யப்பட்டோம், அடக்குமுறைக்கும் உள்ளானோம். எனினும் திராவிடநாடு திராவிடருக்கே என்று முழக்கமிட்டபடிதான் பணியாற்றி வருகிறோம். திராவிடநாடு திராவிடருக்கே என்ற திட்டம், மாணவா உலகிலே, ஆதரவு பெற்றிருக்கிறது.

வடநாடு சென்று இடிபட்டுத் திரும்பும் ஒவ்வொரு அரசியல்வாதியும், இதன் அவசியத்தை உணரக் காண்கிறோம்.

கைவிரித்துக்காட்டும் 'கனம்கள்' கூட டில்லியின் போக்கைக் கண்டிக்கக்கேட்டு, பொதுமக்களே இப்போது திராவிடநாடு திராவிடருக்கே என்ற திட்டம்தான் தேவையான திட்டம் என்பதை உணரத் தலைப்பட்டுள்ளனர்.

கடைவீதிகளிலேஉலவும்போதே திராவிடநாடு திராவிடருக்குத் தேவை என்ற திட்டம் புரிந்துவிடுகிறது.

பெரிய பெரிய வியாபாரக்கோட்டங்களின் விலாசமே எடுததுக் காட்டுகிறது, திராவிடநாடு திராவிடருக்கு என்ற திட்டம் தேவை என்பதை.

அரிசிக்கு ஆலாய்ப் பறக்கும் மக்கள் அறிந்துகொண்டுள்ளனர், திராவிட நாடு திராவிடருக்கு இல்லாததால்தான் இந்தத் திண்டாட்டம் வந்தது என்று.

நூல் கிடைக்காது வாடும் போதெல்லாம் நெசவாளிகள் உணருகின்றனர்; திராவிடநாடு திராவிடருக்கு இல்லை, எனவேதான் நூல் உற்பத்தி இருந்தும், நெசவுக்கு நூல் கிடைக்கவில்லை என்பதை.

இவ்வளவு விளக்கம் கிடைத்து, நமது முழக்கம், மக்களிடம்சென்று மகத்தான மாறுதலை ஏற்படுத்தி இருக்கும் இந்நாள், தேர்தல் வந்துவிட்டது.

திராவிடநாடு திராவிடருக்கே, என்று சட்டசபையிலே முழக்கமிட்டு உலகுக்கு நமதுபிரச்சினையை அறிவிக்க, திராவிடர் கழகமோ, திராவிட முன்னேற்றக் கழகமோ, வாய்ப்பு ஏற்படுத்திக கொள்ளவில்லை, தேர்தலிலேஈடுபடாததால்.

திராவிட கழகங்கள்தான் சட்டசபைக்குச்செல்லவில்லை என்றாலும், சட்டசபைக்குச் செல்லுபவர்களிலே நல்லவர்கள் மூலமாகவாவது, திராவிடநாடு திராவிடருக்கே என்ற முழக்கம் எழச்செய்யவேண்டாமா?

இந்த ஒரு உதவியைச் செய்யும்படி நம்மிடம் உதவி கேட்பவர்களிடம் கேட்பது, ஈனத்தனமா!

நம்முடைய உதவியை—கூட்டுறவை—நேசத்தை — தேர்தலின் போது கேட்பவர்கள், இந்த உதவி செய்வது. கண்ணியத்தின் அறிகுறியல்லவா?

எனவேதான், தி. மு. கழகம், அதனிடம் பாசம் கொண்டு நேசம் சோருவபவர்களிடம், அன்புடன் சொல்கிறது, திராவிட நாடு திராவிடருக்கே என்ற திட்டத்துக்கு ஆதரவு தாருங்கள் என்று.

திராவிட நாடாவது மண்ணாவது என்று பேசி ஏசிய மமதையாளர்கள் மண்ணைக் கவ்வச் செய்வோம்—அதேபோது சட்டசபையிலே திராவிட நாடு திராவிடருக்கே என்ற முழக்கம் எழச் செய்வோம்—மதுரைத் தீர்மானம் இது. ஆண்டு பலவாகின்றன, நாம் திராவிட நாடு திராவிடருக்கே என்ற வழக்கத்தைத் துவக்கி. இப்போது, சட்டசபையிலாவது முழக்கம் புக வழி தேடுங்கள் — மதுரைத் தீர்மானத்தின் நோக்கம் இதுதான்.

திராவிட நாடு திராவிடருக்கே என்று சட்ட சபையில் முழக்கமிட இசையும் நண்பர்களிலே கம்யூனிஸ்டு நண்பர்களுக்கு நாம் கூறி வருகிறோம், திராவிட நாடு திராவிடருக்கே — திராவிட ஆட்சியில் சமதர்மமே! என்று.

இந்த விளக்கத்துடன், அன்புடன், கம்யூனிஸ்டுகளை அணுகுவது, மதுரைத் தீர்மானம்.

மதுரைத் தீர்மானம், மக்களின் எழுச்சிக்குரல்!

அயல் நாடுகள்

பல அயல்நாடுகளின் கலாச்சாரக் குழுவினருடன் கடிதப் போக்குவரத்து நடத்தி, நமது மாநாட்டிலே அமைக்கும் ஓவியக் கண்காட்சியுடன் அந்தந்த நாட்டின் சிறப்புக் குறிப்புகளை விளக்கும் காட்சிகளை அமைக்கும்படி கேட்டிருந்தோம்.

பல நாடுகளுக்கு விருப்பம் இருந்த போதிலும், அதை நிறைவேற்றப் போதிய காலம் இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொண்டன.

கூடுமான வரையில், தத்தமது நாட்டுச் சிறப்புக் காட்சிகளைக் குறிக்கும் ஓவியங்களைத் தருவதாக, பிரிட்டன், பிரான்சு, செக்கோஸ்லோவேகியா ஆகிய மூன்று நாடுகள் இசைந்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த மூன்று நாடுகளும் அனுப்பும் ஓவியங்கள் முதலியன, தனி விடுதிகளில் தோழர்களின் பார்வைக்கு வைக்கப்படும்.

இதற்குக் கட்டணம் எதுவும் கிடையாது.

மாட்டுப் பெட்டிக்காரர்கள் மக்களை மீண்டும் மயக்க வந்திருக்கும் நேரத்திலா இந்த விவாதம்—இந்த விவாதத்தின் விளைவு கம்யூனிஸ்டுகளுக்குக் கிடைக்கக்கூடிய ஆதரவை நிச்சயமாகப் பாழாக்கிவிடுமே என்ற அச்சம் நம்மைத்தடுக்கிறதே தவிர, ஆதாரங்கள் இல்லாமலில்லை—ஓட்டுகளை விட அதிகமான அளவுக்கு உண்டு. ஜனசக்தியின் வாதம் போலவே—ஆனால் தலைகீழ் முறையிலே காங்கிரஸ் வாதாடுகிறது, திராவிட இனம், ஆரிய இனம், என்றெல்லாம் முன்பு இருந்திருக்கலாம், ஆனால் இப்போது இந்திய இனம் உருவாகி விட்டது, பாரதப்பண்பு உருவாகி விட்டது, பாவிகாள்! அதைக்கெடுக்காதீர், என்று கூறித்தான், திராவிடநாடு பிரச்சினையை எதிர்க்கிறார்கள்.

அவர்கள், பாவிகளே, இந்திய இனத்தைக் கெடுக்காதீர் என்கிறார்கள்.

இவர்கள், அப்பாவிகளே! உங்கள் திராவிட இனம், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய தேசிய இனங்களாகத் தனி உருவங்களெடுத்து விட்டனவே, என்று கூறுகிறார்கள்.

இருவரும் திராவிடநாடு, கூடாது என்பதை வேறு வேறு காரணம் காட்டி மறுக்கிறார்கள் என்று தானே பொருள்படுகிறது. இதுவா, நேச உதயம்!

நேசமாக இருப்போம் வாரீர்—கூட்டாகப் பணியாற்றுவோம் ஒன்று சேரீர் — பொது எதிரியாம் காங்கிரசை முறியடிப்போம் பாரீர்—இவ்வளவும் கூறிக்கொண்டே, திராவிடநாடு வேண்டாம், விட்டு விடுவீர்!! இதுவா நேசத்தின் முதல் பரிசு!

இதைவிடத் தெளிவாக, திராவிடநாடு கேட்கும் போக்கை மாற்றிக் கொண்டால் தான், கம்யூனிஸ்டு கட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டுறவை ஏற்றுக் கொள்ளும் என்று கெம்பீரமாகக் கூறி விடலாமே!

ஒப்பந்தம் கேட்டதன் காரணமே, திராவிடநாடு பிரச்சினையிலே தி. மு. க. அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருப்பதனால் தான். அதைக் கெடுத்துக்கொண்டு, தேர்தல் வேலையில் ஈடுபடும் தெளிவற்ற போக்கை, தேன் தடவித் தந்தாலும் தி. மு. க. தோழர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இதைக் கம்யூனிஸ்டு நண்பர்கள் அனுபவ பூர்வமாக கண்டறிந்துகொள்ளலாம்.

எங்ஙனம் காங்கிரஸ் பாசீசத்தை ஒழிக்க, அதே எண்ணம் கொண்ட முற்போக்காளர்களைத் தேடிக் கண்டறிந்து நேசக் கட்சிகளாகக் கொள்ளும் திட்டத்தை, பரிசீலனைக்குப் பிறகு கம்யூனிஸ்டு கட்சி கொண்டிருக்கிறதோ அதேபோலத்தான், காங்கிரஸ் பாசீசத்தையும் ஒழித்து அதே போது திராவிட நாடு பிரச்சினைக்கும் ஆதரவு தரும் தோழர்கள் இருக்கிறார்களா என்று தேடிட, தி. மு. க. வுக்கு உரிமை இருக்கிறது—வாய்ப்பும் இருக்கிறது. கம்யூனிஸ்டுகள் போட்டியிடாத இடங்களிலே, காங்கிரசை எதிர்த்து நிற்கும் சுயேச்சைகளில் பலர் ஏற்கனவே ஒப்பந்தம் அனுப்பி விட்டனர். மதுரையிலே கூடிப்பேசி, கழகத்தின் கொள்கையும் கண்ணியமும் காப்பாற்றப் படவேண்டும் என்ற நோக்கத்துடனும், கம்யூனிஸ்டு கட்சியும் தி. மு. க. வும் உண்மையான நேசக்கட்சிகளாக வேண்டும் என்ற நோக்கத்துடன், தீர்மானம் செய்தனர் பொதுக்குழுவினர். எனவே தோழர்களை மறுபடியும் அழைக்கிறேன், மதுரை மார்க்கம் இருவருக்கும் நேர்மையான நேசத்தை வளர்க்கும் மார்க்கம். மக்களாட்சிக்கு வழி வகுக்கும் மார்க்கம். அது பற்றிய கருத்து தேவை.

மதுரைத் தீர்மானத்தைப் பற்றி, திட்ட வட்டமான 'பதில்', அதிகார பூர்வமாகத் தேவை—உடனே—உடனே—விவாதிக்க இது அல்ல சமயம்—விரோதி உலவுகிறான் வீராப்புடன்—எனவே எமது மனதை மகிழச் செய்துவிட்டு, நேசக் கரத்தைத் தாரும், நேர்மையாளர்களின் கூட்டுறவு எவ்வகைப் பலனளிக்கிறது என்பதை உணருவீர்கள். மீண்டும், அறிக்கைகள் வெளியிட நேரம் இல்லை. மாநில மாநாட்டிலே நான் முடிவு கூற வேண்டியவன். நண்பர்களே! நல்ல முடிவுக்கு வாருங்கள், விரைவில்.

தி. மு. க. உறுப்பினராகுங்கள்

———

திராவிட முன்னேற்றக் கழகம், மக்கள் மன்றம் — சந்தேகமில்லை. தி. மு. கழகத்துக்கு எங்கும் பேராதரவு — மாற்றாரும் கூறுவர். தி. மு. கழகத்தின் கிளைகள் எங்கும் தழைத்துள்ளன — உண்மை. எனினும், புள்ளி விவரம் கேட்கிறது அறிவு உலகம்.

பேராதரவு பெற்றுள்ள தி. மு. க. வுக்கு, மொத்த உறுப்பினர் எண்ணிக்கை என்ன?—அரசியல் உலகு கேட்கிறது.

குறும்புச் சிரிப்புடன், வேறு கட்சிக்காரர்கள் கேட்கின்றனர்.

கூட்டத்தில் கூடிநிற்பர், கொள்ளை கொள்ளையாக—உறுப்பினர் எவ்வளவு ஐயா! உறுப்பினர் பட்டியலைக்காட்டு—என்று தான் எவரும்கேட்பர். தி. மு. கழகம், சட்டதிட்டம் அமைத்துக்கொண்டுவிட்டது — இனியும், கட்டுப்பாடு இல்லாமல் கழகம் இருக்கக்கூடாது—இருக்கமுடியாது.

உங்கள் ஊரிலே, எவ்வளவு உறுப்பினர், தி. மு. க. வுக்கு என்று கேட்டால், முயற்சி எடுத்துக்கொண்டால் மூவாயிரம் உறுப்பினர்களைச் சேர்க்கமுடியும், என்று கூறும் பதில், இனி தி. மு. க வில் இருத்தலாகாது. உறுப்பினர்களைப் பெருவாரியாகச் சேர்த்தாக வேண்டும்.

கிளைக் கழகங்கள், எஃகுக் கோட்டைகளாக வேண்டும்.

தமிழகத்தில் அதிகமான உறுப்பினர்கள்! கொண்டது தி. மு. க. என்ற நிலை ஏற்படவேண்டும்—ஏற்படுத்த வேண்டும்.

மாநில மாநாடு, இதற்கு வாய்ப்பும் வசதியையும் அளிக்கிறது.

புத்தாண்டு உறுப்பினர்களாகும் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

உறுப்பினர் சேர்க்கும் அலுவலகம், மாநாட்டிலே, தனியாக அமைக்கப்பட்டிருக்கிறது.

அனைவரும், மாநாடு கண்டுகளித்து, ஊர் சென்று உறுப்பினராகலாம் என்று எண்ணுவதைவிட, அங்கேயே உறுப்பினராகிவிடக் கோருகிறோம்.

மாவட்டம், வட்டம், சிற்றூர், பெயர், ஆகிய விவரம் கூறி, கட்டணம் செலுத்தி, உறுப்பினர் சீட்டு பெற்றுக்கொண்டு, தி. மு. க. வுக்கு உன்னதமான உருவத்தை உண்டாக்குங்கள்.

கழக சட்ட திட்டப்படி, தலைமைக் காரியாலயம், மாவட்டம், வட்டம், சிற்றூர் அமைப்புகளுக்குச் சேரவேண்டிய பங்குத் தொகையை, அனுப்பிவிடும்.

மாநாடு, மகத்தான முறையிலே நடைபெற்றது, அதேபோது, தி. மு. க. வுக்கு உறுப்பினர்களும் பெருவாரியாகச் சேர்ந்துவிட்டனர், என்று மகிழ்ச்சி பிறந்திடச் செய்யுங்கள். குடும்பம் குடும்பமாக உறுப்பினராகச் சேருங்கள்.

தனி நாடு கேட்கிறோம், தோழர்களே! தனி நாடு கேட்கிறோம்!!—அதை ஆதரிக்கும் உறுப்பினரின் எண்ணிக்கை எவ்வளவு, என்று தான் அரசியல் உலகு கேட்கும்.

தி. மு. க. தலை நிமிர்ந்து நின்று இதற்குப் பதில் கூறவேண்டும்—பட்டியலைக் காட்டவேண்டும்.

பாசறை அமைகிறது—பணி நடைபெறுகிறது—இனி உரிமைக் கிளர்ச்சியை ஒழிக்கமுடியாது என்று ஆதிக்கக்காரனும் கூறியாகவேண்டிய நிலையைக் காணவேண்டுமானால், நடைபெற்ற பொதுக்கூட்டங்களின் எண்ணிக்கை, மாநாடுகளின் எண்ணிக்கை ஆகியவைகளைக் காட்டினால், போதாது—கண் சிமிட்டியபடி அரசியல் உலகு கேட்கும், உறுப்பினர் எவ்வளவு?—எங்கே புள்ளி விவரம் என்று.

மாநில மாநாடு, இந்த 'வெற்றி'யைப் பெற்றுத் தரவேண்டும். இந்த 'வெற்றி'க்காக வேண்டிக்கொள்கிறோம், உறுப்பினராகுங்கள் — அனைவரும்—நண்பர்களுடன்—குடும்பத்துடன்.

திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாடு

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில், டிசம்பர் 13, 14, 15, 16, நாட்களில்.

தலைவர்: அண்ணாதுரை, திறப்பாளர்: கே. கே. நீலமேகம்

ஓவியக் கண்காட்சி திறப்பாளர்: சி. பி. சிற்றரசு, வரவேற்பாளர்: என். வி. நடராசன்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press.
95, Tirukkachinambi St., Kancheepuram.